1974 சனவரி 21]

திரு. துரை கோவிந்தராசன் : தஞ்சை மாவட்டத்திலுள்ள தென்பறம்பூர், பனவெளி கிராமங்களைத் தஞ்சையோடு இணைக்கும் வகையில் பாலம் கட்டவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. 1962-ல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொகுதியில் நின்ற போது அதற்கு வாக்குறுதி கூடத் தந்தார்கள். அது நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறது. இது உள்ளாட்சித் துறையில் வந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. இது பொதுப் பணித்துறையில் இருக்க வேண்டிய ஒன்று அல்லவா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கேட்கப்பட்ட கேள்வி ஊரக வளர்ச்சித் துறை பற்றியது. சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இது கேட்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி பரிசீலனைக்கு முன்பு எடுத்துக் கொள்ளப்பட்டு 12½ லட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. இப்போது இந்த வேலைகளை ஊரக வளர்ச்சித் துறை எடுத்துக் கொள்ள இயலாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க பெருந்து சாலைகளைப் பராமரிக்க அரசு எடுத்துக் கொள்ளும் திட்டத்தில் சேர்த்துக் கொள்வது பற்றித் தலைமைப் பொறியாளருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

புனவாசிப்பட்டியில் சமுதாயக்கிணறு அமைப்பு

* 56 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், புனவாசிப்பட்டி கிராமத்தில் சமுதாயக்கிணறு தோண்ட அரசு எப்போது ஆணை பிறப்பித்தது ?

(இ) அந்த ஆணை மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

(உ) சமுதாயக்கிணறு வெட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டதற்கு உரிய காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :

(அ) 4—11—1970-ல் அனுமதி அளிக்கப்பட்டது.

(இ) & (உ) புனவாசிப்பட்டி கிராமத்தில் சர்வே எண். 356/3-ல் சமுதாயக்கிணறு தோண்ட எடுக்கப்பட்ட நிலம் மாரியம்மன் கோவில் டிரஸ்டியால் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குத் தானமாகக் கொடுக்கப்பட்டது. மேற்படி கோவில் இடத்தை ஒன்றியத்திற்குத் தானமாகக் கொடுக்க டிரஸ்டிக்கு அதிகாரம் இல்லை என கரூர் ஜில்லா முன்சீப் கோர்ட்டில் தாவா செய்யப்பட்டு தடுப்பு ஆணையும் பெறப் பட்டுள்ளதால் கிணறு வெட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : புனவாசிப்பட்டியில் சமு தாயக் கிணறு வெட்ட வேண்டுமென்று முன்பு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த நாவலர் அவர்கள்தான் ஆணை பிறப் பித்தார்கள். கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தவருக்கும் அந்த நிலத்திற்கும் எந்தவிதமான தொடர்போ, உரிமையோ இல்லை. ஆகவே, உடனடியாக சமுதாயக் கிணற்றைத் தோண்ட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : புனவாசிப்பட்டி கிராமத்தில் சமுதாயக் கிணறு தோண்ட வேண்டுமென்பதற்கு 4—11—1970 அன்றே அரசு அனுமதி அளித்திருக்கிறது. அந்தக் கிணறு தோண்டப்படுகிற இடம் கோவிலுக்குச் சொந்தமான இடம் என்று திரு. தர்மலிங்க முதலியாரும் மற்றும் சிலரும் கரூர் தாலுகா முன்சீப் கோர்ட்டில் தடை ஆணை கோரி பெற்றிருக் கிறார்கள். கோர்ட்டாரிடத்தில் அது பற்றித் தெரிவித்து அதை விலக்க வேண்டுமென்று அரசின் சார்பில் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறது. இன்னும் அதனுடைய முடிவு வரவில்லை.

திரு. எஸ். வடிவேல் : சமுதாயக் கிணறு தோண்டுகிற காலத் தில் ஆதித் திராவிட மக்கள் அதிகம் தண்ணீர் எடுக்கிறார்கள் என்பதற்காக நிலம் வைத்திருக்கிற மேல்சாதிக்காரர்கள் அதைத் தோண்ட விடாமல் தடுப்பதற்குச் சகல வழிகளையும் செய் கிறார்கள். தோண்டபடுகிற இடத்தில் நல்ல தண்ணீர் கிடைத் தால் அதை சமுதாயக் கிணறாகக் கொடுக்க மறுக்கிறார்கள். அரசு விரும்புகிற இடத்தில் கிணறு தோண்டினால் உப்புத் தண்ணீராக

1974 சனவரி 21]

இருக்கிறது. ஆகவே, நல்ல தண்ணீர் கிடைக்கிற இடத்தில் சமுதாயக் கிணறுகளைத் தோண்டி ஆதித் திராவிட மக்கள் பயன் பெற வழி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நல்ல தண்ணீர் கிடைக்கும் இடத்தில் சமுதாயக் கிணறு தோண்டிய பிறகு பக்கத்திலே இருக்கக்கூடிய தனியாரும் கிணறு தோண்டுகிற காரணத்தால் அந்தத் தண்ணீர் குறைந்து விடுகிறது. குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்க முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தால் நல்ல தண்ணீர் கிடைக்குமானால் அந்தப் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது.

அம்மூருக்கு பேருந்து நிலையம்

***57 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு ஜில்லா வாலாஜா ஒன்றியத்தில் உள்ள அம்மூர் பேரூராட்சியில் ஒரு பஸ் நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) அரசினிடம் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : என்னுடைய தொகுதியில் அம்மூர் பேரூராட்சி பெரிய ஊராக இருக்கிறது. அங்கு பஸ் நிலையம் இல்லை. அது சம்பந்தமாக முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கு கடனுவது கொடுத்து ஒரு நிலையத்தைக் கட்ட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்றால் மண்டலப் போக்குவரத்து அதிகாரிகள் அனுமதி பெற வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் இடம் சுகாதாரத்திற்கேற்ற இடமா, போக்குவரத்துக்குச் சாதகமான இடமா, அவசியம் பேருந்து நிலையம் தேவையா என்பதுபற்றி யெல்லாம் ஆராய்ந்து மண்டலப் போக்குவரத்து அதிகாரி இசைவு